## 120 ஏக்கர் … 50 ஆயிரம் மரங்கள்..

## டாக்டர் தம்பதியின் ‘லிட்டில் ஊட்டி’!

புவி வெப்பமயமாதல், மழையின்மை, தொடரும் வறட்சி… என அனைத்துக்கும், ‘மரம் வளர்க்க வேண்டும். என்பதைத்தான் தீர்வாகச் சொல்கிறார்கள். இதனால்தான், தன்னார்வ அமைப்புகள், ஆன்மீக அமைப்புகள், அரசுத் துறைகள் என அனைத்துமே மரம் வளர்ப்பைத் தீவிரமாகச் செய்து வருகின்றன. இந்நிலையில், 120 ஏக்கரில் ஆயிரக்கணக்கான மரங்களை வளர்த்து ‘லிட்டில் ஊட்டி’ என்ற பெயரில் ஒரு காட்டையே உருவாக்கி வைத்திருக்கிறார்கள், துரைசாமி –சிவகாமி என்ற டாக்டர் தம்பதியர்.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டியிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பச்சைமலை அடிவாரப்பகுதியான காஞ்சேரியில்தான் இருக்கிறது ‘லிட்டில் ஊட்டி’ பண்ணை. உள்ளே நுழைந்ததுமே மலைவாசஸ்தலத்திற்குச் சென்றது போன்றதொரு குளுமை, திரும்பிய பக்கமெல்லாம் மரங்கள். ஏதோ ஓர் அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து விட்ட பிரமை.

**மரத்தடி சாப்பாடு விதைத்த மரம் வளர்ப்பு!**

துரைசாமி, “மேகத்தை ஈர்க்கும் பசுமை காந்தம்தான், மரங்கள். நாட்டுக்கு மட்டுமில்லை, வீட்டிற்கும் வளம் கொடுக்கும். அதனால்தான், இந்த இடத்தை காடாக்கி இருக்கிறோம். நாங்க இரண்டு பேரும் டாக்டர்கள். எங்கள் பிள்ளைகளும் டாக்டர்கள். முழுநேரம் மருத்துவமனையைக் கவனிக்க வேண்டியிருந்ததால், மருத்துவத்தை தாண்டி வெளியில் வர முடியவில்லை. இதற்கு இடையில்தான் இந்த இடத்தை 87-ம் வருடத்தில் வாங்கிப்போட்டோம். வேலை காரணமாக எந்த விவசாயத்தையும் ஆரம்பிக்கவில்லை.

15 வருடத்திற்கு முன் மகள் கல்யாண பத்திரிக்கையைக் கொடுப்பதற்காக பொம்மிடியில் இருக்கும் சொந்தக்காரர் வீட்டிற்குப் போயிருந்தேன். வீட்டைச் சுற்றி அரை ஏக்கரில் ஏகப்பட்ட மரங்களை வளர்ந்திருந்தார்கள். பார்த்ததுமே ரொம்ப பிடித்துப் போனது. அந்த மரத்தடியிலேயே கட்டில் போட்டு சாப்பாடு பரிமாறினாங்க. அந்த அனுபவத்தை மறக்கவே முடியல. அவங்ககிட்டயே மரங்களைப் பற்றி விசாரித்தபோது.. மரங்களுக்கு பெரிய அளவில் செலவோ, பராமரிப்போ செய்யத் தேவையில்லை. வருமானமும் அதிகமாக கிடைக்கும் என்று தெரிந்து கொண்டேன். அதன் பிறகுதான் மரம் வளர்ப்பில் ஆசை வந்தது.

**ஆலோசனை சொல்லும் ஈஷா !**

மதுராந்தகம் பக்கத்தில் இருக்கும் பொலம்பாக்கத்தில் நாற்பது ஏக்கரில் மரம் வளர்க்கும் முத்துமல்லா ரெட்டியார் பற்றிக் கேள்விப்பட்டு, அவரையும் பார்த்துப் பேசினேன். மண் வளம், மழை வளம் இல்லாத பகுதியில் அவர் அவ்வளவு மரங்களை நன்றாக வளர்த்திருந்தார். ’20 வருடமாக தொடர்ந்து நெல், கரும்பு, மஞ்சள் என்று பயிர் செய்யும்போது கிடைக்கும் வருமானத்தைவிட, 20 வருடம் வளர்ந்த மரங்களில் அதிக லாபம் கிடைக்கும் என்று கணக்குப் போட்டு காட்டினார். அதிலிருந்து இன்னும் ஆர்வம் அதிகமாயிடுச்சு. அவர்தான் ஒரே வகையான மரங்களை வளர்த்தால் மண்வளம் கெடாமல் இருக்கும் என்று சொன்னார். அதன் பிறகு நடவு செய்வது, கவாத்து பண்றத மாதிரியான விஷயங்களையும் தெரிந்து கொண்டு 2000-ம் வருடத்தில் மரம் வளர்ப்பில் இறங்கினேன்.

மரக்கன்னுகள், விதைகள் என்று வாங்கி நட்டேன். நல்லா முளைத்து வந்தாலும், விதைகளைப் போட்டு கன்னு உருவாக்கி, நடுவது சிரமமாக இருந்தது, பிறகு 2004-ம் வருடம் ஈஷா மையத்திலிருந்து தேவையான நாத்துகள் கிடைத்தது. இவங்களிடம் நாம நாத்து வாங்கினால், மூன்று மாதத்திற்கு ஒரு தடவை நம்ம தோட்டத்திற்கு வந்து ஆலோசனை சொல்றாங்க. இந்த விஷயம் பிடித்திருந்ததால், ஈஷா பண்ணையிலேயே 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை வாங்கி, நட்டு வளர்த்திட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 14 வருடமாகிறது. இன்னமும் மரங்களை நடவு செய்து கொண்டிருக்கிறேன் என்றார் துரைசாமி.

**பலன் தரும் பல வகை மரங்கள்!**

“செம்மரம், மகோகனி, ரோஸ்வுட், தேக்கு, குமிழ், மலைவேம்பு, நீர் மருந்து மாதிரியான மரங்களை நிறைய நட்டிருக்கிறேன். கூடவே 5,000 பனங்கொட்டைகளை வாங்கி விதைத்திருக்கிறேன். இது பயன் தர, இன்னும் 10 வருடங்கள் ஆகும். கன்னு 300 ரூபாய் என்று 250 அகர் மரக் கன்றுகளை வாங்கி நட்டிருக்கிறேன். இதுவும் நல்லா வளர்ந்து வருகிறது. வேங்கை, சிசு, பூவரசு, வேம்பு, நாட்டு வாகை, கறிபலா, மூங்கில், சில்வர் ஓக், வாத நாராயணன், எலுமிச்சை, சவுக்கு என்று ஆயிரக்கணக்கில் மரங்கள் இருக்கு. ஆயிரத்திற்கும் மேல் சந்தன மரங்கள் இயற்கையாகவே இங்கு இருக்கு.

மொத்தமாக பார்த்தால்.. கிட்டத்தட்ட 50 ஆயிரம் மரங்களுக்கு மேல் இருக்கு. முழுக்க சொட்டு நீர்ப்பாசனம்தான். மலையடி வாரங்கிறதால் கிடைக்கும் மழையிலேயே மரங்கள் நல்லா

செழிப்பாக வளர்கிறது. வருடத்திற்கு ஒரு முறை 120 ஏக்கருக்கும் சேர்த்து 6 லாரி ஆட்டு எரு, 4 லாரி கோழி எருவை உரமாக போடுகிறேன். இன்னும் மரங்களிலிருந்து வருமானம் எடுக்கலை என்றார் துரைசாமி.

என்னைப் பொறுத்தவரை சுயநலமாகத்தான் மரங்களை நடுகிறேன். ஆனால், அதில் மறைமுகமாக பொதுநலம் இருக்கு. இந்தப் பகுதியில் இப்போ நல்ல மழை கிடைப்பதால் நிலத்தடி நீர் அதிகமாகியிருக்கு. வெப்பநிலையும் குறைந்திருக்கு. ஆரம்பத்தில் என் குடும்பத்திலேயே இதற்கு நிறைய எதிர்ப்புகள் இருந்தது. இப்போது எல்லாருமே இந்த மாற்றங்களை நேரடியாக உணர்வதால், இந்த இடத்தை பொக்கிஷமாக பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்றார்.

| **மரம்** | **மொத்த மரங்கள்** | **ஆண்டுகள்** | **மகசூல் (ஒரு மரம்)** | **விலை (தற்போதைய நிலவரப்படி)** |
|---|---|---|---|---|
| செம்மரம் | 2,000 | 25 | 3 டன் | ஒரு டன் 8 லட்ச ரூபாய் |
| மகோகனி | 8,000 | 15 | 15 கன அடி | ஒரு கன அடி 5 ஆயிரம் ரூபாய் |
| ரோஸ்வுட் | 3,000 | 30 | 20 கன அடி | ஒரு கன அடி 5 ஆயிரம் ரூபாய் |
| தேக்கு | 5,000 | 10-15 | 10 கன அடி | ஒரு கன அடி 2 ஆயிரத்து 500 ரூபாய் |
| குமிழ் | 5,000 | 10 | ஒரு டன் | 15 ஆயிரம் ரூபாய் |
| மலைவேம்பு | 2500 | 5 | 800 கிலோ | ஒரு டன் 7 ஆயிரம் ரூபாய் |
| நீர் மருந்து | 500 | 30 | 20 கன அடி | ஒரு கன அடி 1,500 ரூபாய் |

தொடர்புக்கு,

துரைசாமி, செல்போன் : 94432-36912

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.09.2014 www.vikatan.com**